200 ஆண்டுகளுக்கு பிறகு

# ஜமீன்ஊத்துக்குளி மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம்

## திரளான பக்தர்கள் தரிசனம்

பொள்ளாச்சி,மே.1–

200 ஆண்டுகளுக்கு பிறகு ஜமீன்ஊத்துக்குளி மாரியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

### மாரியம்மன் கோவில்

பொள்ளாச்சி அருகே ஜமீன்ஊத்துக்குளியில் 400 ஆண்டுகள் பழமையான மாரியம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் கடந்த 200 ஆண்டுகளுக்கு முன்பு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த நிலையில் கோவில் கோபுரத்தில் மரங்கள் ஊடுருவி சிதிலமடைந்து காணப்பட்டது. இதனை புனரமைக்கும் பணிகள் நடைபெற்றன. இதைத்தொடர்ந்து கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி கடந்த 28–ந்தேதி கும்பாபிஷேக விழா தொடங்கியது. அன்று மாலை 6 மணி முதல் இரவு 10.45 மணி வரை அனுக்ஜை, விக்னேஸ்வர பூஜை, வாஸ்து சாந்தி, முதல்கால ஹோமம் உள்பட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. நேற்று முன்தினம் காலை 7.30 மணிக்கு இரண்டாம் கால ஹோமம், மண்டகார்ச்சனை, தீபா ராதனை மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை 3–ம் கால ஹோமம் உள்பட பூஜைகள் நடைபெற்றது.



ஜமீன் ஊத்துக்குளி மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் நடந்த காட்சி.

### கும்பாபிஷேகம்

முக்கிய நிகழ்ச்சியான கும்பாபிஷேக விழா நேற்று நடைபெற்றது. இதையொட்டி காலை 5 மணிக்கு நான்காம் கால ஹோமம் நடந்தது. அதை தொடர்ந்து காலை 6.10 மணிக்கு கோவில் கலசங்களுக்கு சிவாச்சாரியார் சிவசுப்பிரமணியம் புனிதநீர் ஊற்றினார். பின்னர் பக்தர்கள் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டது. காலை 7 மணிக்கு மாரியம்மனுக்கு பரிவார சகிதம், மகா அபிஷேகம், தசதரிசனம், தசதானம், பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

மேலும் இன்று (செவ்வாய்கிழமை) முதல் மண்டல பூஜை தொடங்குகிறது. முன்னதாக கும்பாபிஷேக விழாவில் சித்தார்த் காளிங்கராயர், அரண்மனை குடும்பத்தினர், ஊர்பொதுமக்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். இதுகுறித்து கோவில் அறங்காவலர் சித்தார்த் காளியங்கராயர் கூறியதாவது:–

### சமய புரம் மாரியம்மன் சிலை பிரதிஷ்டை

இந்த கோவிலில் அம்மன் சுயம்பு நிலையில் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்.

கடந்த 200 ஆண்டுகளுக்கு முன் கோவில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. அதன்பிறகு திருவிழாக்கள் எதுவும் நடைபெறாமல் இருந்தது. கோவிலில் தினமும் பூஜைகள் மட்டும் செய்யப்பட்டு வந்தது.

தற்போது 200 ஆண்டுகளுக்கு பிறகு கோவில் புனரமைக்கப் பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்று உள்ளது. இனி ஆண்டுதோறும் திருவிழாக்கள் நடத்தப்படும். பவுர்ணமிக்கு அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறும். இதற்கிடையில் இங்கு 3¾ அடி உயரம் கொண்ட 8 கைகளை கொண்ட சமயப்புரம் மாரியம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.